# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 38 August - 2019 Issue - 8


ஆசிரியர் உரை

## ஆனதோத்தியர்கள்

**பெ**யர் என்னும் மூன்றெழுத்து வார்த்தை உலகெங்கிலும் **பெயர்** பெற்ற ஒரு வார்த்தை. இந்த வார்த்தையோடு சம்பந்தப்படாத ஓர் உயிரினமோ, ஓர் இடமோ, ஒரு பொருளோ இருக்க முடியாது. பெயர் என்பது ஒருவரையோ அல்லது ஒன்றையோ அறிவதற்கும், அடையாளப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தை அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட வார்த்தைகள். பெயரிடப்படவேண்டு மென்பதின் தேவையைத் தெரிந்து, பெயரிடுவதை ஆதியிலேயே ஆரம்பித்து வைத்தவர் நாம் காண்கின்ற எல்லாவற்றையும், நம்மையும் உண்டாக்கின தேவன். முதல் மனிதன் ஆதாமுக்கு தேவன் தான் பெயரிட்டாரென்று நேரிடையான வசன ஆதாரம் இல்லாவிட்டாலும், தேவனைத் தவிர வேறு யாரும் அங்கே இல்லாததால் தேவனே பெயரிட்டிருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், ஏன் ஏவாளுக்கும் பெயர் சூட்டும்படி தேவன் ஆதாமை அனுமதித்தார் [ஆதி.2:19;3:20].

இப்படிப் பூமியில் பிறந்த எல்லோருக்கும் பெயரிடப்பட்டி ருந்தாலும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் தங்களுக்கு இடப்பட்ட பெயராலே மாத்திரம் அறியப்படாமல், அதைத் தாண்டி அவர்கள் **பிறந்த ஊரின் பெயராலும்,** அவர்கள் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட **நிகழ்வாலும்** அறியப்படுகிறவர்களாக மாறிவிடு கின்றனர். அப்படிப்பட்டவர்களை அடையாளப்படுத்த அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது. அவர்கள் பிறந்த ஊரையோ அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட நிகழ்வையோ சொன்னாலே போதும், அவர்கள் பெயர் தானாக நம்முடைய நுனி நாக்கில் வந்து நிற்கும்.

ஆம், வேதம் அறிந்தவர்களுக்கு பழைய ஏற்பாட்டில் **ஊத்ஸ்** தேசம் என்றவுடன் **பக்தன் யோபுவும்** (யோபு 1:1) ஊர் என்றவுடன் **ஆபிரகாமும்** (ஆதி.11:31) புதிய ஏற்பாட்டில் **அரிமத்தியா** என்றவுடன் **யோசேப்பும்** (மத்.27:57) **சிரேனே** என்றவுடன் **சீமோனும்** (லூக்கா 23:26) நினைவுக்கு வராமலிருக்கமாட்டார்கள். அது போலவே, **சொப்பனக்காரன்** என்றவுடன் பழைய ஏற்பாட்டு யோசேப்பும் (ஆதி.37:17-19) **காட்டிக் கொடுத்தவன்** என்றவுடன் **யூதாஸ்காரியோத்தும்** (மத்.26:25) கண்ணெதிரில் வந்து நிற்பார்கள். பெயர் சொல்லுவதற்கு முன்பே சம்பந்தப்பட்டவர்களை அடையாளப் படுத்துமளவுக்கு அந்த ஊர்களும், அவர்கள் சம்மந்தப்பட்ட நிகழ்வுகளும் மக்கள் மனதில் இடம் பிடித்துவிடுகிறது.

இப்படிப் பெயர் சொல்லாமலே ஒரு நபரை அடையாளப்படுத்தும் ஊர்களில் **ஆனதோத்** என்ற ஊரையும் சேர்த்துக்கொள்ள முடியும். ஏனெனில், புலம்பல் தீர்க்கனாகிய **எரேமியா** இல்க்கியாவின் குமாரன் என்றழைக்கப்படுவதைத் தாண்டி **ஆனதோத் ஊரான்** என்றே அதிகம் அறியப்படுவதற்கு வாய்ப்புண்டு. இந்த ஆனதோத்தியர்களைப் பற்றித் தான் நாம் இம்மாதம் பார்க்க இருக்கிறோம். அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணிக் காரியங்களைக் கவனித்து விடுவோம்.

ஆனதோத் என்பது எருசலேமுக்கு வடகிழக்கில் சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்திருந்த ஓர் ஊர். இன்றளவும் இருக்கும் இந்த ஊர் இந்நாளில் **அனத்தா** என்றழைக்கப்படுகிறது. ஆனதோத் என்பதற்கு **பதில்** என்று பொருள். லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆசாரியர்கள் குடியிருந்த ஊர். இந்த ஆசாரியர்கள் மக்களின் ஆன்மீகப் பிரதிநிதிகளாகத் தேவ சமூகத்தில் பணியாற்ற வேண்டியவர்கள். வெற்றித் தளபதியாகிய யோசுவா கானானை மேற்கொண்டு தேசத்தைப் பங்கிட்டுக் கொடுத்தபோது இந்த ஆனதோத் பென்யமீன் கோத்திரத்துப் பங்கில் இருந்தது. பிறகு ஆசாரிய ஊழியம் செய்பவர்களுக்குப் பட்டணங்கள் ஒதுக்கப்பட்டபோது இந்த ஆனதோத் லேவியர் வசம் வந்து சேர்ந்தது (யோசுவா 21:18).

ஆனதோத்திலிருந்துதான் புலம்பல் தீர்க்கனாகிய எரேமியா தனது இளம் வயதில் தேவனால் ஊழியத்துக்கு அழைக்கப்பட்டான். இவன் தெரிந்து கொள்ளுதல் பற்றி வேதம் கூறுவதைப் பாருங்கள். நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார் (எரே.1:5). தேவனின் வார்த்தைகளுக்கு எரேமியாவின் பதிலைப் பாருங்களே! அப்பொழுது நான் : ஆ, கர்த்தராகிய ஆண்டவரே இதோ, நான் பேச அறியேன்; சிறு பிள்ளையாயிருக்கிறேன் என்றேன் (1:6).

தேவன் எரேமியாவுக்குக் கொடுத்த பணி மிகச் சவாலானது. அக்காலகட்டத்தில், ஆனதோத்தை உள்ளடக்கிய யூதா தேசம் ஆன்மீ ரீதியாக மிகப்பெரிய சரிவிலிருந்தது. இந்த எரேமியா யோசியா, யோவகாஸ், யோயாக்கீன், யோயாக்கீம் சிதேக்கியா என்று ஐந்து ராஜாக்களின் நாட்களில் தன் ஊழியத்தைச் செய்தவன். அவர்களில் எரேமியா தீர்க்கதரிசன ஊழியம் ஆரம்பித்த காலத்தில் இருந்த யோசியா மாத்திரம் தேவனுக்குப் பயப்பட்ட ராஜா. அடுத்தடுத்து வந்த நான்கு ராஜாக்களும் தேவனை எதிர்த்து நின்றவர்கள். யோசியா ராஜா தேவ பயத்தோடு மேற்கொண்ட ஆன்மீகச் சீர்திருத்தங்களுக்குப் பலனேதும் கிடைக்கவில்லை. யூதாவின் ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்களாகத் தங்களை மாற்றிக் கொண்டு, தேவ காரியங்களை முழுமூச்சாய் எதிர்த்து நின்றார்கள் [எரே.6:16]. மெய்யான தேவனுக்கான வணக்கத்தை தாறுமாறாகப் புரட்டி ஆன்மீகச் சீரழிவுக்கும், ஒழுக்கக்கேட்டிற்கும் தங்களை மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுத்தார்கள்.

எஞ்சிய யூதாவின் ஜனங்கள் தான் இப்படியென்றால், இவன் பிறந்த ஆனதோத் குடிகளும் அதற்கு விதிவிலக்காக இல்லை. இத்தனைக்கும் இது ஓர் ஆசாரியப் பட்டணம். ஆசாரியர்கள் பற்றி தேவன் என்ன கூறுகிறார் பாருங்கள். **ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும்; வேதத்தை அவன் வாயில் தேடுவார்களே, அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்** [மல்கியா 2:7]. ஆனால், ஆனதோத்தியர் நேர் எதிரான சிந்தை கொண்டவர்களாக இருந்துள்ளனர். ஏனைய யூதாவின் ஜனங்களுக்கு இவர்கள் எவ்விதத்திலும் மாறுபட்டு இருக்கவில்லை. எரேமியா சம்பந்தமாக இவர்கள் பேசின வார்த்தைகளைப் பாருங்கள். **ஆதலால், நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்க தரிசனம் சொல்ல வேண்டாம் என்று சொல்லி உன் பிராணனை வாங்கத் தேடுகிற ஆனதோத்தின் மனுஷரைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறார்** [11:21] அதாவது, கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைக்க வேண்டாம் என்று எரோமியாவின் பங்காளிகள் கொலை மிரட்டல் விடுத்திருக்கிறார்கள். ஆஹா என்ன பக்தி! மெய்சிலிர்க்கிறது! இவர்கள் தான் தேவாலயத்தில் பணியாற்றியிருக்கிறார்கள்! நம்ப முடிகிறதா?

சரி, நம்மை மெய் சிலிர்க்க வைக்கும் இந்த ஆனதோத்தியர் மூலம் நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இனிப் பார்ப்போம்.

### I. ஆனதோத்தியர் வேதப் பிரமாணங்களை அசட்டை பண்ணினார்கள்

மெய் சிலிர்க்க வைக்கும் இந்த ஆனதோத்தியர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், வேதப் பிரமாணங்களை அசட்டை செய்யக்கூடாது என்பது.

பழைய ஏற்பாட்டின் காலத்திலும் சரி, புதிய ஏற்பாட்டின் காலத்திலும் சரி தேவப்பணி என்பது கனத்திற்குரிய ஒன்று . பழைய ஏற்பாட்டின் காலத்தில் தனக்கென ஊழியம் செய்ய ஒரு கோத்திரத்தைத் தேவன் தெரிந்து கொண்டார். அப்படித் தெரிந்து கொள்ளப்பட்ட லேவி கோத்திரத்து ஆசாரியர்களுக்கென்று 12 கட மைகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவைகளில் ஒன்று, கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன **சகல பிரமாணங்களையும் அவர்களுக்கு தலைமுறை தலைமுறை யாகப் போதிக்கும்படியான நித்திய கட்டளை** (லேவி.10:11). அவர்கள் செய்யும்படியாகக் கொடுக்கப்பட்ட பணிகளில் இந்த **நித்திய கட்டளை** தான் பிரதான பணி.

இப்படிப்பட்ட பாக்கியமான நிலையை ஆனாதோத்தின் ஆசாரிய வம்சம் பெற்றிருந்தும், அவர்கள் அதை அசட்டை பண்ணினார்கள். எந்தளவு அசட்டை பண்ணினார்கள் என்பது நம்மைக் குலை நடுங்க வைக்கிறது. ஆதலால், **நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்த ருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டாம்** என்று எச்சரிக்கிறார்கள் (11:12). தேவனுடைய வார்த்தைகளை தலையில் சுமந்து, ஊர் ஊராகத் திரிந்து, கூவிக்கூவி போதிக்க வேண்டிய இந்த ஆசாரியக் கூட்டம், கர்த்தருடைய நாமத்திலே பேச வேண்டாம், வாயை மூடு, பேசினால் கொன்று விடுவோம் என்று நா கூசாமல் கூறியுள்ளார்களே. தேவனையும், அவருடைய வார்த்தை களையும் விட்டு விலகும்போது இருதயம் எந்தளவு துணிகரங் கொள்ளுகிறது பாருங்களே!

அருமையானவர்களே! இந்த ஆனதோத்தியர்கள் பழைய ஏற்பாட்டோடு முடிந்து விட்டார்களா அல்லது அதே மனநிலை கொண்டவர்கள் நம்முடைய நாட்களிலும் கிறிஸ்தவத்தில் இருக்கிறார்களா? கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டாமென்ற ஆனதோத்தியர்கள் போல, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலான உபதேசக் காரியங்களைப் பற்றி பேச வேண்டாமென்பவர்கள் இன்றைய கிறிஸ்தவத்திலும் இருக் கிறார்கள் தானே. அன்றைய ஆனதோத்தியர்களுக்கும், இன்றைய பிரிவினைக் கிறிஸ்தவர்களுக்கும் உள்ள ஒரே வேறுபாடு **கொலை செய்து விடுவோம்** என்று மிரட்டுவதில்லை. மற்றபடி கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கான எதிர்ப்பில் உறுதிகாட்டி முழுப் பகையாய்ப் பகைக்கவே செய்கிறார்கள்.

கர்த்தருடைய **நாமம்** அல்லது **அதிகாரம்** என்பது பக்தி வாழ்வுக்கு மிகவும் முக்கியம். அப்போஸ்தலன் பவுல் கொலோச யருக்கு எழுதும் போது, **வார்த்தையிலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயே சுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் என்கிறார்** (கொலோ.3:17). அதாவது கிறிஸ்துவின் **அதிகாரத்தின்படிதான்** ஆத்துமா சம்பந்தப்பட்ட

ஒவ்வொரு வார்த்தையும், பக்தி சம்பந்தமான ஒவ்வொரு செயலும் இருக்க வேண்டுமென்பதே இதன் பொருள். அப்படியானால், கிறிஸ்துவின் அதிகாரம் எங்கே உள்ளது என்ற கேள்வி வருகிறது. அப்படித்தானே. புதிய ஏற்பாடும், அதின் உபதேசச் சட்டங்களுமே கிறிஸ்துவின் அதிகாரத்தின்படியானவை. இதைத்தான் யாக்கோபு ஆசிரியர் பூரணப் பிரமாணம் என்றும், சுயாதீனப் பிரமாணம் என்றும் கூறுகிறார் (யாக்கோபு 1:25). கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய இந்தப் பூரணப் பிரமாணத்திற்கு ஒருவர் தம்மை ஒப்புக்கொடுக்கும் போதுதான் தன் செய்கைகளில் பாக்கியவானாயிருக்க முடியும். மீறி நடந்தால் நாம் தேவனையும், கிறிஸ்துவையும் உடையவர்களாயி ருக்க முடியாது (IIயோவான் 9) ஆகவே, ஆனதோத்தியர்கள் போல் வேதப்பிரமாணத்தை அசட்டை செய்து தேவ கோபத்திற்கு ஆளாகாமல் நம்மைக் காத்துக்கொள்வது அவசியம்.

II. **ஆனதோத்தியர் ஆராதனை முறைமைகளை அற்பமாய் எண்ணினார்கள்**

மெய் சிலிர்க்க வைக்கும் இந்த ஆனதோத்தியர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், ஆராதனை முறைமைகளை அற்பமாய் எண்ணக்கூடாது என்பது.

பரலோகத்தின் தேவன் ஒழுங்கின் தேவன். ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்த பூமியைச் சீர்படுத்தியே தன் படைப்பின் பணியைத் துவக்கினார் (ஆதி.1:2). ஆதியிலிருந்து ஒழுங்கை அவர் வலியுறுத்தியே வந்துள்ளார். எடுத்துரைக்கப்பட்ட ஒழுங்கை மீறி ஆதாமும், ஏவாளும் நடந்து கொண்டதால் தான் அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டியுள்ளார் (ஆதி. 3:24). ஒழுங்கீனத்தை நான் சகிக்க மாட்டேன் என்பதை உலகத்தில் இந்த இருவரைத் தவிர வேறு யாரும் இல்லாத நிலையிலேயே தெளிவுபடுத்திவிட்டார். ஆன் மீக ஒழுங்கீனத்தின் உச்சத்தைத் தொட்ட உலகத்தை நோவாவின் நாட்களில் நீரினால் அழிக்கவும் தேவன் தயங்கவில்லை (ஆதி.6, 7அதி).

இந்தத் தேவன் தான் தனக்கான ஆராதனைக் காரியங்களுக்கு ஓர் ஒழுங்கு வகுத்துத் தந்துள்ளார். ஆபேல் காணிக்கை அங்கீகரிக்கப் பட்டது, காயீன் காணிக்கை நிராகரிக்கப்பட்டும் ஒழுங்கை அடிப் படையாகக் கொண்டதே. முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்தவர் களுக்கு இந்த ஒழுங்கு வாய்மொழியாகக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், மோசேயின் காலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இது முழு விபரமாக எழுதிக் கொடுக்கப்பட்டது. ஆசரிப்புக் கூடாரத்தில் அவர்கள் செய்த ஆராதனைக் காரியங்களுக்கும், ஆலயத்தில் ஆற்ற வேண்டிய முறைமைகளுக்கும் ஒழுங்குகள் வகுத்தும், தொகுத்தும் கொடுக்கப்பட்டிருந்தன (லேவி.8:615; எண். 18:6-10). புதிய ஏற்பாடும் இக்கருத்தை வலியுறுத்தாமலில்லை. பக்தி வாழ்வில் ஒழுங்கீனங்களுக்குத் தலைப்பட்ட கொரிந்தியர்களுக்கு பவுல்

எழுதும் போது **சகலமும் கிரமமாயும், நல்லொழுக்கமாயும் செய்யப் படக்கடவது** என்று வலியுறுத்தினார் (Iகொரி.14:40).

இதுதான் தேவ ஒழுங்காக இருக்கும் போது ஆனதோத்தின் ஆசாரியர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்றும், இந்த ஆசாரியர்களோடு சேர்ந்து தீர்க்கதரிசிகள் நடத்திய அட்டூழியங்களுக்கு தேவ சமூகத்திலிருந்து எதிரொலித்த வார்த்தைகளின் பாரம் எப்படியிருந்தது என்றும் பாருங்கள். **என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ (20:11) என்றும், தீர்க்கதரிசியும், ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள்; என் ஆலயத்திலும் அவர்கள் பொல்லாப்பைக் கண்டேன்** என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார் (20:11). பொல்லாப்பு என்று கர்த்தர் எதைக் குறிப்பிடுகிறார்? ஆலயத்தில் ஆசாரியர்கள் விக்கிரக வணக்கத்திற்குத் துணை போனதைத்தான். என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் ( யாத்.20:3) என்று திட்டமாய் எச்சரித்த தேவனுடைய ஆலயத்தில் விக்கிரக வணக்கம் விமரிசையாக நடந்தேறியுள்ளதே!

இதிலே வேடிக்கை என்னவென்றால், **இவைகளெல்லாம் யூதா ஜனத்துக்குப் பிரியமாயிருந்தது தான்.** ஆம், வசனங்களைக் கவனியுங்கள். திகைத்துத் திடுக்கித்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள். **இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது** (எரே.5:30). ஆன்மீக அவலங்கள் எப்படியிருந்தாலும் அது ஜனத்துக்குப் பிரியமாயிருந்து விட்டால் போதும், அதை அப்படியே அரங்கேற்றி விடலாம் என்பது எரேமியா நாட்களிலேயே ஆரம்பமாகிவிட்டதே. அப்படியானால், இன்றைக்குச் சொல்லவா வேண்டும்?

அருமையானவர்களே, நம்முடைய நாட்களில் கிறிஸ்தவத்தில் காணப்படும் ஆன்மீக ஒருங்கீனங்களையும், ஆராதனை வேளையில் நடக்கும் அலங்கோலங்களையும் காணும் போது, கிறிஸ்தவத்தில் முன்னோடிகளாகவும், வழிகாட்டிகளாகவும் இருப்பவர்கள் ஆனதோத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களோ என்ற சந்தேகம் வருகிறதே. **தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தும்** (யோவான் 4:24), ஆராதனைகள் பெருங்கூச்சலோடு கூடிய ஆர்ப்பட்டத்தோடும், ஆட்டம் பாட்டத்தோடும், நடந்தேறி இதுவா இயேசு கற்பித்த அன்பின் மார்க்கம் என்று கேள்வி கேட்கத்தக்க அளவு போய்விட்டதே. **ஆவியாடு என்றால் சரியான மனநிலையோடு, சத்தியத்தோடு என்றால் கிறிஸ்து தந்த வசனங்களோடு** (யோவான் 17:17).

இப்பொருளி பயபக்தியோடு நடக்க வேண்டிய ஆராதனைகள், தடம் புரண்டு சென்றதால் தானே சக மனிதர்களின் மற்றும் மாற்று மதத்தவரின் வெறுப்புக்கும், ஏச்சுக்கும், பேச்சுக்கும் காரணமாகி விட்டது. புரிகிறதா?

III. **ஆனதோத்தியர்கள் கொடுக்கப்பட்டதைச் சரியாகப் பயன்படுத்தவில்லை**

மெய் சிலிர்க்க வைக்கும் இந்த ஆனதோத்தியர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கர்த்தர் கொடுத்ததை முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்பது.

ஆனதோத்துக்கு வேறு எந்த ஊருக்கும் இல்லாத ஒரு சிறப்பு உண்டு. ஆம், இந்த ஊரின் பெயருக்கான பொருள் **பதில்** அல்லது **பதில்கள்** என்பது. எந்தச் சூழ்நிலைக்கும் இவர்கள் கை பிசைந்து நிற்க வேண்டிய அவசியம் இல்லாதபடி தங்களின் ஊரின் பெயருக்கான பொருளை நினைத்தாலே **தீர்வு** உண்டு என்பதை உணர்ந்து அடுத்த கட்டத்திற்குச் சுலபமாக நகர்ந்து செல்ல முடியும். போதாக் குறைக்கு, ஆனதோத் ஆசாரியப் பட்டணமாக இருந்தபடியால், **ஊரீம், தும்மீம்** போன்றவை இவர்கள் வசமிருந்தது. இந்த ஊரீம், தும்மீமைக் கொண்டு எந்தச் சூழ்நிலைக்கும் தேவனிடம் ஆலோசனை கேட்க முடியும். அக்காலகட்டத்தில் அப்படியொரு வழக்கம் தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஊரீம், தும்மீம் பற்றிய சில தகவல்களைத் தருவது இங்கே அவசியம் என்று கருதுகிறேன். **பிரதான ஆசாரியனின் நியாயவிதி மார்ப்பதக்கத்திலே ஊரீம், தும்மீம் என்பவைகளை வைப்பாயாக** [யாத் 28:30]. **அந்த ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக் கடவன்** [எண்.27:21]. இந்த ஊரீம், தும்மீம் ஆசாரியர்கள் வசமே இருக்க வேண்டும் [உபா.33:8]. இந்த இரண்டும் **ஆம்** அல்லது **இல்லை** என்பதின் பொருளாக இருக்கிறபடியால், இவைகளைக் கொண்டு தேவனிடத்தில் விசாரித்துக் கேட்கும் வாய்ப்பும், விசாரித்தவுடன் என்ன செய்ய வேண்டுமென்ற தெளிவும் கிடைக்கும். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து யூதர்கள் திரும்பி வந்த பிறகு, இந்த ஊரீம், தும்மீம் பற்றி பேச்சு இல்லாமல் போய்விட்டது.

மோசேயின் பிரமாணம் சராசரி யூதனுக்கென்றால், இந்த ஆசாரியர்களுக்கு எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்பதை தீர்மானிக்கும்படியாய் பிரமாணங்களைத் தாண்டி, ஊரீம், தும்மீம் போன்றவைகளும் இருந்தது. ஆனால், தங்களிடம் இருப்பதின் மேன்மையை உணராமல், தங்களையும் கெடுத்து, ஒரு தேசத்து மக்களின் ஆன்மீக வாழ்வையும் அலங்கோலமாக்கினார்கள். இதன் விளைவாக ஆசாரியர்களும், ஜனங்களும் தங்கள் சரீர வாழ்வு மற்றும் ஆன்ம வாழ்வின் பிரச்சனைகளுக்காக அந்நிய தேவர்களிடம் பதில் தேடிப் போனார்கள். **உரியிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் நெய்க்கு அலைந்த** கதையாகவல்லவா

இருக்கிறது? இப்படியுமா ஆன்மீகவாதிகள்? இதன் விளைவாக பாபிலோனுக்கு அடிமைகளாக விற்கப்பட்டுப் போனார்கள்.

சரி, ஆனாதோத்தியர் இருக்கட்டும், நாம் எப்படி? கொடுக்கப் பட்டதைச் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்பதைத் தன்னுடைய சீடர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான், **தாலந்து** உவமையை இயேசு கற்பித்தார் (மத்.25:14-29). அப்படியானால், கொடுக்கப்பட்டதை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு ள்ளோமா? பரலோகத்தின் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட பிரதான கொடை இயேசு இரட்சகர். இது குறித்துப் பவுலடியார் கூறுவதைப் பாருங்கள். **தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர்** ஏ் கூறுகிறார் (ரோமர் 8:32). அப்படியானால், நமக்காகக் கொடுக்கப் பட்ட இயேசுவை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளோமா? அதாவது, உலகம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும்படியாய்த் தேவன் அவரை அனுப்பிக் கொடுத்திருக்கும்போது அவர் போதித்த உபதேசச் சட்டங்களின் படி இரட்சிப்பை ஏற்று நமது பக்தி வாழ்வை நாம் நடத்திக் கொண்டுள்ளோமா?

தேவனால் கொடுக்கப்பட்ட அடுத்த கொடை இயேசுவைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கொடுக்கப்பட்ட **வேத வசனங்கள்.** வேத வசனங்கள் **எல்லாவற்றுக்கும் போதுமானதாக** இருப்பதோடு (IIதீமோ.3:16,17) ஜீவனும் வல்லமையும் உடைய தாகவும் இருக்கிறது (எபி.4:12). இந்த வார்த்தைகள் தான் நம்முடைய நித்தியத்தைத் தீர்மானிக்கப் போகிறது (யோவான் 12:48). அப்படி யானால், தேவ வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இவைகளின் போதனையை அப்படியே ஏற்று, அவைகளோடு ஒன்றையும் கூட்டாமல், குறைக்காமல் (வெளி.22:18,19.) செயல் படுத்திக்கொண்டுள்ளோமா? அல்லது ஆனதோத்தியர் போல கொடுக்கப்பட்டதின் மேன்மையை உணராமல், வேத வசனங்களை விட்டுவிலகி பக்திக் காரியங்களில் வசனத்தை மீறி அலைந்து உள் உணர்வுகளுக்கும், பெரும்பான்மைக் கருத்துக்களுக்கும், பாரம் பரியப் பெருமைகளுக்கும், நவீன உபதேசங்களுக்கும் நம்மை ஒப்புக் கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோமா? சொல்லுங்கள். தேவ சித்தத்தையும், தேவ திட்டத்தையும் அறிந்து செயல்படுவதற்கு வேத வசனங்களைத் தேடாமல், மாயையானவைகளாகிய பொய்யான அற்புத, அடையாளங்களுக்கும் (II தெச.2:9) நிறைவேறாத பொய்த் தீர்க்கதரிசனங்களுக்கும் இன்றைய கிறிஸ்தவம் அடிமையாகி விட்டதே. நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து மனந்திரும்ப வேண்டியது அவசியம். இல்லையானால் அவர்கள் பாபிலோனுக்கு விற்கப்பட்டது போல் நாமும் நரகத்திலே தள்ளப்படுவோம். ஆகையால், பயபக்தியோடு நடந்து நரகத்தைத் தவிர்த்து பரலோ கத்தை சுதந்தரிப்போம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!! ★

# மன்னிப்பு

Bro. J.C. சோட்

**மொ**ழிகளிலே சிறந்த வார்த்தை **மன்னிப்பு** (Forgiveness). நம் வாழ்வில் இதைவிட வேறொன்றும் நமக்குத் தேவையில்லை. மன்னிப்பில்லாமல் நாம் எப்படி வாழ முடியும்?

மன்னிப்பு என்பது பாவத்தின் காரணமாகத்தான் தேவைப் படுகிறது. பாவம் என்பது, நியாயப்பிரமாணத்தை மீறுகிற செயலாக இருக்கிறது. [1யோவான்3:4]. இருந்தபோதிலும், பலர் தாங்கள் பாவம் செய்கிறோம் என்பதை அறியாதிருக்கிறார்கள். ஏனென்றால், பாவம் வஞ்சனையுள்ளதாயிருக்கிறது [எபிரெயர் 3:13]. இது யாருக்கும் தெரியாமலேயே ஒருவருடைய வாழ்க்கைக்குள் புகுந்து விடுகிறது. மேலும் இது, ஒருவர் தான் செய்யும் பாவத்தைக் குறித்துச் சற்றும் வருத்தப்படாத அளவுக்கு இருதயத்தைக் கடினமாக்கி விடுகிறது. அப் பாவம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லுகிறது. ஒரு பொய் இன்னொரு பொய்க்கு வழி வகுக்கிறது என்னும் பழஞ்சொல் உண்மையாயிருக்கிறது. அதாவது, ஒரு பாவம் மற்றொரு பாவத்திற்கு வழிவகுக்கிறது. இறுதியில், பாவம் ஒருவரை அழிவில் கொண்டு போய்விடுகிறது. இது ஒரு மனிதனுக்கு மத்திரம் அல்ல, இது எல்லா மனிதருக்கும் உண்மையாயிருக்கிறது. எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமை யற்றவர்களாகிறார்கள். இறுதியாக, பாவம் மரணத்தைக் கொண்டு வருகிறது [ரோமர் 6:23].

இப்படிப்பட்ட பாவத்தை மேற்கொள்வதற்கு ஒரேயொரு வழி தான் இருக்கிறது. அதுவும் இயேசுகிறிஸ்து மூலமாகத்தான் சாத்தியமாகிறது. ஏனென்றால், அந்த ஒரேயொரு வழியாக இயேசுகிறிஸ்து மாத்திரமே இருக்கிறார் [யோவான் 14:6] இந்தப் பாவத்தை மேற்கொள்ளும் காரணத்திற்குத்தான் கிறிஸ்து இவ்வுலகத்திலே மரித்தார் [ரோமர் 5:8]. இது உண்மையா யிருக்கிறபடியால், பாவமன்னிப்பிற்கான நிபந்தனைகளை விதிக்க கிறிஸ்துவுக்கு மாத்திரமே சகல அதிகாரமும் உள்ளது.

மனிதன் பாவியாயிருக்கிறபடியால், நான் இதைச்செய்வேன், நான் இதைச் செய்வேன், நான் அதைச் செய்யமாட்டேன் என்று சொல்லும் பேச்சுக்கே இடமில்லை. மனிதனுடைய ஒரே நம்பிக்கை மன்னிப்பின் நிபந்தனைகளுக்குத் தன்னை ஒப்புவிப்பது. மன்னிப்பைப் பெற்று, பெற்ற அந்த மன்னிப்பிற்காக நன்றி செலுத்துவது தான்.

### மன்னிப்புக்கான நிபந்தனைகள்

பாவ மன்னிப்புக்கான நிபந்தனைகள் வேதாகமத்தில் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. கீழ்ப்படிதல் எப்படி கிரியை செய்கிறது என்பதைக் காட்டுவதற்கு குறிப்பிட்ட கட்டளைகளும் உதாரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கீழ்க்காணும் கட்டளைகளைக் கவனியுங்கள்:

- **கிறிஸ்துவுக்குச் செவிகொடுத்து அவரை விசுவாசிக்க வேண்டும்** [மத்தேயு 17:5].
- **பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்.** [லூக்கா 13:3]
- **கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கை பண்ண வேண்டும்** [மத்தேயு 10:32]
- **இரட்சிக்கும்படி ஞானஸ்நானம் பெற வேண்டும்** [மாற்கு 16:16]

இதன் ஆதாரங்களுக்கு உங்கள் வேதாகமத்தில் அப்போஸ்தலர் நடபடிகள் 2,8,9 மற்றும் 16-ம் அதிகாரத்தைக் கவனித்து வாசியுங்கள். இதை நீங்கள் செய்யும்போது மனிதனுடைய வார்த்தைகளுக்கும், தேவனுடைய வார்த்தைகளுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ள முடியும். இயேசு கிறிஸ்து பாவத்திலிருந்து மீட்கும் இரட்சகராயிருக்கிறார். மாறாக, அவர் ஒரு மனிதரோ அல்லது பாதிரியாரோ அல்ல. உங்களுக்குப் பாவமன்னிப்பு வேண்டுமென்றால், கிறிஸ்து நீங்கள் செய்யும் படி என்ன சொல்லியிருக்கிறாரோ அதின்படி செய்ய வேண்டும், இல்லையெனில் இழந்து போவீர்கள் [மத்தேயு 7:21-23; யோவான்12:48].

### மன்னிப்பின் அழகு வெளிப்படும் வழிகள்

கர்த்தருக்கு நாம் கீழ்ப்படியும்போது, நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு அப்பாவங்கள் வெகு தூரத்திற்கு அனுப்பிவிடப்படுகிறது. லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் ஆரோன் இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களைத் தெரிந்து

கொண்டான். இதில் ஒன்றை இஸ்ரவேலின் பாவங்களுக்காக பலியாகச் செலுத்தினான். இன்னொன்றை வனாந்திரத்தில் விட்டுவிட்டான். இந்த ஆடு **போக்காடு** என்று அழைக்கப்பட்டது. ஏனென்றால், இஸ்ரவேலின் பாவங்கள் முழுவதும் இதின் மேல் சுமத்தப்பட்டு வனாந்திரத்திற்கு அனுப்பப்படுகிறது. இதின் மூலம் ஜனங்கள் முழுமையாகச் சுத்தமாகிறார்கள். நாமும் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது நம்முடைய பாவங்களும் நம்மிடமிருந்து அகற்றப்பட்டு அது வெகுதூரத்திற்குத் தூக்கியெறியப்படுகிறது. அதினிமித்தம் நாம் முற்றிலுமாக விடுபடுகிறோம். இது ஓர் அழகான எண்ணங்களில் ஒன்றாக இருக்கிறதல்லவா? உங்கள் பாவங்களிலிருந்து முற்றிலுமாக விடுபட நீங்கள் விரும்ப மாட்டீர்களா?

இயேசு கிறிஸ்து நம்மிடமிருந்து பாவத்தை எடுத்துப் போட்டபடியால் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன. இதுகுறித்து அப்போஸ்தலனாகிய பேதுருவும், **நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைக்கும் படிக்கு அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** என்று சொல்லுகிறார். நான் என் வாழ்க்கையில் ஆண்களும், பெண்களும் சிறு பிள்ளைகளும் பாரமான சுமைகளைச் சுமந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன். ஒருவேளை நான் அப்பாரத்தைச் சுமந்து திரியும் போது, வழியில் யாராவது ஒருவர் முன்வந்து நான் உங்கள் பாரத்தைச் சுமக்க விரும்புகிறேன் என்று சொன்னால் அது எவ்வளவு அருமையானதாக இருக்கும். உண்மையாகப் பார்த்தால் பாவபாரம் நம்மை அமிழ்த்துகிறதாக இருக்கிறது. அப்படி அமிழ்த்தும்போது, அது நமக்கு அதிக வேதனையையும், மன வலியையும் தருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலுள்ள சிலர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களுடைய பாரத்தை எடுத்துப் போடுவார் என்பதை அறியாமலும், யாரிடம் செல்வது என்று தெரியாலும் வழியற்றுப் போய் நம்பிக்கையிழந்து தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து நம் பாரங்களைச் சுமக்க ஆயத்தமாயிருக்கிறார் என்பது எத்தனை ஆச்சரியமானதாக இருக்கிறது. **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** என்று அவர் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? [மத்தேயு 11:28-30].

தொடரும்...

பெண்கள் பகுதி

# பரிசுத்த ஆவியானவரால் நற்சாட்சி பெற்றவர்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்தவ உலகிலே அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அப். 7:58 – ல் நாம் வாசிக்கிறபடி பவுலினுடைய பெயர் சவுல் என்பதாகும். பவுல் சிலிசியா நாட்டுக்குத் தலைநகரமாகிய தர்சு பட்டணத்திலேபிறந்தார். எருசலேமிலே கனம் பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல் கொடுத்த போதனையை கற்றுக் கொண்டார்.

அப்போஸ்தலன் பவுல் 13 நிருபங்களை எழுதினார். அதில் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களிலும் பவுல் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தீமோத்தேயுவுக்கு அளிக்கிறார். விசுவாசத்தில் நான் பெற்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவே என்று சொல்வதில், பவுல் தீமோத்தேயுவின் மேல் வைத்திருக்கும் அன்பும் நம்பிக்கையும் வெளிப்படுகிறது. சின்ன ஆசியாவில் பிறந்தவனாகிய இவனுடைய தனப்பன் கிரேக்கன், தாய் யூத ஸ்திரீ. இவன் தாயாகிய ஐனிக்கேயாளும், பாட்டியாகிய லோவிசாளும் இவனைச் சிறுபிராய முதலே யூதருடைய வேத சாஸ்திரத்தில் நன்றாய் பழக்கி வந்தார்கள். பவுல் முதல் முறை லீஸ்திராவுக்கு வரும்போது இவனும் இவனுடைய தாயாரும் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வந்ததாகத் தெரிகிறது. ஏனென்றால், பவுல் இரண்டாந்தரம் வரும்போது தீமோத்தேயு சபையில் பெயர் பெற்றவனாயிருந்தான் (அப்.16:1). இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் இவனைத் தமக்குக் கூட்டாளியாக ஏற்படுத்திக் கொண்டார் (அப்.16:3). பவுலோடு சுவிசேஷ வேலை செய்யும்பொருட்டு லீஸ்திராவிலுள்ள மூப்பர்களும், பவுலும் இவனைப் பிரதிஷ்டை செய்தார்கள் (1 தீமோத்.4:14 ; 2 தீமோத்.1:16).

பவுல் மூன்றாம் நற்செய்திப்பயணம் பண்ணும்போது தீமோத்தேயு எபேசு பட்டணத்தில் பவுலோடு தங்கியிருந்து பின்பு மக்கெதொனியாவுக்குப் போனான் (அப்.19:22). பவுல் ரோமாபுரி சிறைசாலையில் இருந்தபோது தீமோத்தேயு அவருடன் இருந்தான் ( பிலி. 1:1:2:9; கொலோ. 1:1 ;பிலோ.1) இதற்கு பின்பு தீமோத்தேயு சிறைச்சாலையில் வைக்கப்பட்டான் ( எபி.13:23).

பிரியமானவர்களே, மேலே நாம் படித்த காரியங்கள் இளைஞன் தீமோத்தேயுவை பற்றி ஓரளவு நாம் புரிந்துகொள்ள உதவியிருக்கும் என்று நம்புகிறேன்.

பிரியமானவர்களே, மேலே நாம் படித்த காரியங்கள் இளைஞன் தீமோத்தேயுவை பற்றி ஓரளவு நாம் புரிந்துகொள்ள உதவியிருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதும் போதுதான் பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு இப்படியாகக் கூறுகிறார். **உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனசாட்சியோடு ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்தவிசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்து; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்.** (II தீமோத்1:4,5). ஒரு தீவிரமான ஊழியத்தை தீமோத்தேயு செய்தானென்றால், அதற்குக் காரணம் அவனுக்குள்ளிருந்த மாயமற்ற விசுவாசம். இந்த மாயமற்ற விசுவாசம் அவனுக்கு எப்படிக் கிட்டியது? இந்த விசுவாசம் அவனுக்கு தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை கற்றுக் கொடுத்ததினால் தான் அவன் இவ்வளவு சீக்கிரம் அப்போஸ்தலன் பவுலோடு சேர்ந்து பலமாய் உபயோகப்படுத்தப்பட்டான். வாலிப வயதிலேயே சுவிசேஷப் பயணம் செய்ய முடிந்தது.

இன்றைக்குள்ள தாய்மார்கள் எத்தனைபேர் ஐனிக்கேயாளைப் போல் இருக்கிறோம்? தேவன் மேல் விசுவாசம் வைப்பதற்குப் பதில் உலகத்திலும், உலகத்திலுள்ள காரியங்களிலும் விசுவாசம் வைக்க நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். உலகக் கல்வி ஞானம், அறிவு, கேள்வி இவைகளில் தன் மக்கள் சிறந்து விளங்க வேண்டும், பேரும், புகழும் பெற வேண்டும் என்று தான் அநேக தாய்மார்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள். தேவனுக்கடுத்த காரியங்களைத் தவிர மற்ற எல்லாமே இக்கால இளைஞர்களுக்குத் தெரிகிறது. விசுவாசமில்லாமல் பிள்ளைகள் வளர்கிறார்களென்றால் அதற்குக் காரணம் பெற்றோர் தான்; அதிலும் குறிப்பாக தாய்மார்கள் தான் காரணம்.

II தீமோத். 3:15 **கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறுவயதில் முதல் அறிந்தவன் என்று உனக்குத் தெரியும்** என பவுல் கூறுகிறார். சிறுவயது முதல் தீமோத்தேயு வேதத்தை நேசித்தான், வாசித்தான். இவ்வாறு செய்ய வைத்தது அவன் தாய். நாமும் கூட நம் பிள்ளைகளை சிறுவயது முதற்கொண்டே வசனங்களை வாசிக்கச் செய்ய வேண்டும். அது அவர்களுக்கு எதிர்காலத்தில் ஆசீர்வாதமுள்ளதாக அமையும். சங்கீதக்காரன் கூறும் போது **உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்கு போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவானாயிருக்கிறேன்** (சங்.119:99,100). என்று கூறுகிறார். வேத வசனம் ஒருவனை ஞானவானக்குகிறது. இந்த இரகசியத்தை

அறிந்து தான் ஐனிக்கேயாள் தன் மகனுக்கு வேதத்தை வாசிக்கக் கற்றுக் கொடுத்தாள் போலும்.

II தீமோத்தேயு 2:3 – ல் **நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய் தீங்கநுபவி என்கிறார்.** II தீமோத் 4:5 லும், தீங்கநுபவி என்று தீமோத்தேயுவிடம் கூறுகிறார். இவ்விதமாக ஒரு பக்குவமான ஊழியனாக தீமோத்தேயு சிறந்து விளகுகிறான். துன்பத்தினூடே சென்று சுவிசேஷத்தை அறிவிக்கிறான், சிறையில் அடைக்கப்படுகிறான். இப்படியெல்லாம் ஒரு நல்ல தீமோத்தேயுவை நாம் வேதத்தில் காயமுடிகிறதென்றால் அது அவன் தாயினுடைய முயற்சித்தான். இந்தத் தாய்க்கு அந்த விசுவாசமானது அவளுடைய தாயாகிய லோவிசாளுக்குள் இருந்து வந்தது. தாய், பாட்டி ஆகிய இருவருக்குள்ளும் இருந்த விசுவாசம்தான் தீமோத்தேயுவை வல்லமையுள்ளவானாக மாற்றியது.

கிறிஸ்துவுக்குள் அருமையான தாய்மார்களே! நாமும் நம் பிள்ளைகளைத் தேவனுக்காக வளர்ப்போம். தேவனுக்கடுத்த காரியங்களுக்கு முதல் இடத்தை நம் பிள்ளைகள் கொடுக்க வேண்டும். முதலாம் நூற்றாண்டில் இளைஞன் தீமோத்தேயு விசுவாசமுள்ளவனாய் வாழ்ந்தானென்றால் இன்றைக்கு 21 ம் நூற்றாண்டில் வாழும் நாமும் நம் பிள்ளைகளை தீமோத்தேயுக்களாக வளர்க்க முடியும். சுவிசேஷத்தை, உண்மை சத்தியத்தைக் கூற, வேதாகமத்தில் உள்ள ஒரே சபையை உலகிற்கு பறைசாற்ற இளைஞர்கள் தேவை. நம் பிள்ளைகளைத் தேவனுக்காய் அர்ப்பணிப்போம். நாமும் ஐனிக்கேயாளை போல் இருப்போம். ஐனிக்கேயாளும், லோவிசாளும் பரிசுத்த ஆவியானவரால் கூறப்பட்டு வேதாகமத்தில் நற்சாட்சி பெற்றதுபோல், நாமும் தேவனால் நினைவுக்கூறப்பட்டு பரலோகத்தின் தேவனோடு என்னென்றும் நிலைத்திருப்போம். அப்படி வாழ தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்வாராக! ★

## *யோபு புத்தகத்திலிருந்து*

**பாடுகளும், உபத்திரவங்களும் எல்லாச் சமயங்களிலும் நம்முடைய தண்டனைக்கானவைகளல்ல.**

**மாறாக அநேக நேரங்களில் நம்முடைய பயிற்சிக்காவும், பக்தி மேம்பாட்டுக்கும் ஆனவைகள்.**

# தொடர்ந்து வளருதல்

Dr. ஏபில் நாயகம்

**வ**ளர்ச்சி என்பது நாம் எல்லாரும் விரும்பும் ஒரு காரியம். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் நாம் வளர வேண்டும் என்ற ஆசையில்லாதவர்கள் இருக்க முடியாது. எப்படி சரீர வாழ்க்கையில் வளர்ச்சி ஒரு முக்கியப் பகுதியோ, அதைப் போலவே ஆவிக்குரிய வாழ்க்கையிலும் வளர்ச்சி இன்றியமையாத ஒன்றே! இது தான் உண்மை. இப்பேருண்மையை அறிந்தவர்கள் பலராயினும், அதைப் புரிந்து கொண்டவர்கள் சிலரே.

ஒரு கிறிஸ்தவன் எல்லா நிலையிலும் தன் வளர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். கிறிஸ்துவை அறிகிற அறிவிலே, பக்தி வைராக்கியத்திலே, விசுவாசத்திலே, இயேசுவின் சிந்தையைப் பெறுவதிலே, நற்காரியங்களைச் செய்வதிலே வளர வேண்டும். மிக முக்கியமாக இவை அனைத்திலும் சீரான வளர்ச்சி தேவை. கிறிஸ்துவை அறிகிற அறிவை மட்டும் பெற்றுக் கொண்டு, அவருடைய சிந்தையைப் பெறாமல் இருந்தால் அது பூரண வளர்ச்சி அல்ல.

ஒரு கிறிஸ்தவனின் வளர்ச்சி தானாகவே நடக்கும் ஒரு காரியமல்ல. அதற்காக நாம் முயற்சி செய்யவேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நாள் தொடங்கி ஒருவரின் வளர்ச்சி தானாகவே நிகழும் என்றால் அனைவருமே ஒரு முதிர்ச்சியான, தேறின கிறிஸ்தவர்களாக மாறிவிடுவோம். அப்படி நடக்கிறதா? கண்டிப்பாக இல்லை. மாறாக, நாம் நம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி வளராமல் போனால் கடைசி வரைக்கும் பாலுண்கிற குழந்தையாகவே இருந்துவிடுவோம். நீதியின் வசனத்தின் மேல் பழக்கமில்லாதவர்களாக இருந்துவிடுவோம். எனவே, கிறிஸ்தவன் வளருவதற்கு சொந்த முயற்சி அவசியமாகும். அப்படி முயற்சி செய்யும் பொழுது பலர் பாதியிலே பின்வாங்கி போகிறதை நாம் பார்க்க முடியும். ஆரம்ப கட்டங்களில் இருக்கும் உற்சாகமும், உத்வேகமும் குறைந்து விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். இதற்குப் பல காரணங்கள் இருக்கும். தனிப்பட்ட காரணங்களாக வேலைப் பளு தவறான நண்பர் கூட்டம், குடும்ப காரணங்கள் சபையில் காணப்படும் பிரச்சனைகள் என பலவற்றைக் காரணங்களாகக் காட்டலாம்.

அப்போஸ்தலனாகிய பவுலைக் கவனியுங்கள். 2 கொரி. 11:24–28 வரை வாசித்தால், அவர் பட்ட கஷ்டங்கள், அவருக்கு நேரிட்ட எதிர்ப்புகள் ஆகியவைகளை தன்னுடைய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்க அவர் அனுமதிக்கவில்லை. தனக்கு வந்த கஷ்டங்கள் தன்னை பாதிக்கா வண்ணம் அவர் பார்த்துக் கொண்டார். II கொரி. 4:8,9 ல் தான் நெருக்குதலும், கலக்கங் களும், துன்பப்படுதலும் இல்லாமல் இருந்தேன் என்றா அவர் சொல்லுகிறார்? இல்லை. நெருக்கம் இருந்தாலும் அதுதன்னை ஒடுக்கில் போட அவர் விடவில்லை. கலக்கங்களிலும் மனமுறி வடைய அவர் அனுமதிக்கவில்லை. நாம் கற்றுக் கொள்ள வேண்டிய இரண்டு காரியங்கள் இங்கே உண்டு. ஒன்று, நம் வளர்ச்சிக்கு தடைகள் நிச்சயம் வரும். தடையில்லாத வளர்ச்சியை எந்த ஒரு கிறிஸ்தவனும் எதிர்பார்க்கக் கூடாது. இரண்டு, அப்படி நமக்கு நேரிடுகிற தடைகளை நாம் ஜெயம் கொள்வது அவசியம். நம்முடைய இலக்கை மேலான காரியங்கள் மீது வைத்து வைக்க வேண்டும்.

I கொரி. 15:58 ல், ஆகையால், எனக்கு பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களா யிருப்பீர்களாக என்று சொல்வதை கவனியுங்கள். நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நாம் செய்யும் முயற்சிகள், தியாகங்கள் நிச்சயம் விருத வாய்ப்போய்விடாது.

ஒரு வேளை உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும் நமக்கு உண்டாகுமானால் நாம் வசனத்தை கேட்கும் அறிவினால் பிரயோஜனமில்லாதவர்களாக மாறிவிடுவோம். அப்படிப்பட்டவர்களை இயேசு தம் உவமையில் முள்ளுள்ள இடங் களில் விழுந்த விதைக்கு ஒப்பாகச் சொல்லுகிறார் (மாற். 4:18,19).

நம்முடைய வளர்ச்சிக்கு உதவும் மற்றொரு காரியம், நம்மை சபையின் காரியங்களோடு ஐக்கியப்படுத்திக் கொள்வது. சபை யின் ஊழியகாரியங்களில், சபையின் மூலமாக நடைபெறும் நற் காரியங்களில், சபை விசுவாசிகளின் தேவைகளில் நம்மை உட் படுத்தும் பொழுது நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அது உதவியாக இருக்கும். சபையோடு நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளாத பட்சத்தில், பிற உலக காரியங்களுக்கு நம்மைப் பிசாசானவன் உட்படுத்த வாய்ப்பு உள்ளது. அதற்கு நாம் இடம் கொடுக்காமல் விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம்.

வாலிபர்களே, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோம். அது போதும் என்ற நிலை மாறவேண்டும். நாம் வரை வேண்டும். அவரைப் போல சிந்தையுள்ளவர்களாக மாற வேண்டும். பலமான ஆகாரம் உட்கொள்ளுகிறவர்களாக நாம் மாற வேண்டும். இவை யாவும் தானாகவே நடக்கப்போகும் காரியங்கள் அல்ல. நாம் அதற்கென்று முயற்சி செய்ய வேண்டும். முயற்சியில் தொய்வு வரும் போது சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே நாம் பூரண வளர்ச்சியை அடைய முடியும்.

பூரண வளர்ச்சியை நோக்கி பிரயாணிப்போம். தேவன் நமக்கு நிச்சயம் உதவுவார்! ஆமென்!! ★

## நீதிமொழிகள் 1 – 10 அதிகாரங்களிலிருந்து இளைஞர்களுக்கான அறிவுரைகள்

- *ஞானத்தைப் பெற்றுக்கொள், அதற்கான முதல்படி கர்த்தர் தான் என்பதை ஏற்றுக்கொள் ( 1:7 )*
- *நீதியின் வழிகளில் நட (2:20)*
- *ஞானத்திற்கும் – உதவிக்கும் தேவனிடம் கேள் (3:6)*
- *பெற்றோருக்குக் கீழ்ப்படி (3:11,12)*
- *ஆகாத சேர்க்கைகளை விட்டு விலகு ( 1:10-19)*
- *தற்புகழ்ச்சியை விரும்பாதே*
- *தேவன் வெறுக்கும் காரியங்களுக்கு விலகி இரு (6:17-19)*
- *தீமையான பெண்களை நாடாதே (7:15-27)*
- *உண்மையான செல்வம் குணச் செல்வமே*
- *உன் சரீரத்தைக் கவனமாக கர்த்தருக்கு ஒப்புவி (9:236).*






# நல்ல நட்பு

Dr. பிரெய்ஸி

**ஹா**ய், அன்புக் குழந்தைகளே!

**நீ**ங்களெல்லாரும் அக்கா எழுதும் சிறுவர் பகுதியைத் தவறாமல் வாசித்து அப்படி வாசித்தவைகளை உங்கள் வாழ்க்கையில் தவறாமல் பின்பற்றுவீர்கள் என்று நம்புகிறேன்.

கடந்த மாதம் உங்களைப் போன்ற சிறுபிள்ளைகள் கூட, எப்படி கர்த்தருக்கு வேலை செய்ய முடியும் என்று பார்த்தோம்.

இம்மாதம், நம்முடைய நட்பையும், பழக்கத்தையும் யாரிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று பார்க்கப் போகிறோம். Iகொரி.15:33-ம் வசனம், **ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்** என்று கூறுகிறது. ஆம், கெட்ட பழக்கங்களைக் கொண்டவர்களோடு நட்பும், உறவும் கொண்டால் அது நம்மையும் கெட்டவர்களாக்கி தவறான பாதைக்கு இழுத்துச் சென்றுவிடும்.

அன்புப் பிள்ளைகளே! நமக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கை கர்த்தர் கொடுத்திருக்கும் கொடை. ஆகவே, இந்த வாழ்க்கையை அவருக்காகப் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் கர்த்தர் உங்களை ஆசீர்வாதிப்பார். அதேசமயம், நாம் கூடா நட்புக் கொள்வோமானால், ஒருபோதும் சரியான பாதையில் நடக்க முடியாது. இதற்குச் சரியான உதாரணம், நியாயாதிபதிகளின் புத்தகம் 13 – 16 அதிகாரங்களில் உள்ள சிம்சோன் – தெலீலாள் சம்பவம்.

சிம்சோன், சிங்கத்தை எதிர்த்து வெற்றிகொள்ளக் கூடிய அளவுக்கு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட பலசாலி. ஆனால், தெலீலாளோடு கொண்ட கூடா நட்பால் தன் உயிரை இழக்க வேண்டி வந்தது. காரணம், அவன் பலம் பற்றிய ரகசியத்தை யாருக்கும் சொல்லக்கூடாது என்று தேவன் சொல்லியிருந்தும் அவன் அதை அவளுக்குச் சொல்லிவிட்டான். பார்த்தீர்களா? கூடா நட்பின் விளைவாக சுலபமாக அவன் எதிரிகளுக்கு விலை போய்விட்டான்.

என் சிறு பிள்ளைகளே! மோசமான பழக்கம் மற்றும் நட்பு எண்ணமாய் முடியும் என்பதற்கு இது ஒரு உதாரணம். வேதாகமத்தில் இன்னும் பல உதாரணங்கள் உண்டு. நம்மைச் சுற்றி உள்ள சமுதாயத்திலும் இப்படி நாம் காண முடியும்.

ஆகவே, ஒழுக்கமான நண்பர்களை ஞானமாகத் தெரிந்து கொள்ளுங்கள். சரியான, நீதியான வழியில் நடங்கள். சபை காரியங்களில், இந்த வயதிலிருந்தே ஈடுபடுங்கள். தவறாமல் ஞாயிறு பள்ளிக்குச் செல்லுங்கள். இதன் மூலம் கர்த்தருடைய இரக்கமும், ஆசீர்வாதமும் உங்களுக்குக் கிடைக்கும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும் போது, நீங்கள் நன்றாகப் படித்து, உயரிய இடத்துக்கு வருவீர்கள்! சரியா?

*அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.*

## சிறுவர்களுக்கான வேத வினா ( II ராஜாக்கள் 22)

1. **பொல்லாங்கனவைகளை நடப்பித்த இஸ்ரவேலை தேவன் யார் கையில் ஒப்புக்கொடுத்தார்? அவர்கள் இஸ்ரவேலை எத்தனை ஆண்டுகள் ஆளுகை செய்தார்கள்?**
2. **கர்த்தருடைய தூதன் யாருக்கு இரண்டு முறை தரிசனமானார்?**
3. **சிம்சோனின் மனைவி எந்த ஊரைச் சேர்ந்தவள்?**
4. **சிம்சோன் கொன்ற செத்த சிங்கத்தின் உடலில் சில நாள் கழித்து என்ன வந்தது?**
5. **விடுகதையை விடுவிப்பவர்களுக்கு எத்தனை துப்பட்டிகளும், மாற்று வஸ்திரங்களும் கொடுப்பதாக வாக்களித்தான்?**
6. **எதைக் கொண்டு சிம்சோன் ஆயிரம் பேரைக் கொன்றான்?**
7. **ஆயிரம் பேரைக் கொன்ற இடம் என்னவென்று அழைக்கப்பட்டது?**
8. **சிம்சோன் தன் மகாபலம் குறித்து தெலீலாளிடம் எத்தனை முறை பொய் சொன்னான்?**
9. **தெலீலாள் எந்த ஊரைச் சேர்ந்தவள்?**
10. **சிம்சோனின் தகப்பன் பெயர் என்ன?**

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | | |
|---|---|---|
| ஜெசி | – | காங்கயம் |
| டென்னி | – | காங்கயம் |
| சகாய புஷ்பராஜ் | – | மணப்பாறை |
| B. பெனிட்டா டென்னி சாரன் | – | காங்கயம் |
| S. ஸ்டெஃபி ஏஸ்லின் | – | பல்லடம் |
| S. ஹெவன்லின் | – | திருப்பத்தூர் |
| அபிஷேக் | – | பவானி |
| ரோஷிணி | – | பவானி |
| ஷைனி | – | திருப்பூர் |
| ஸ்டைஸி | – | திருப்பூர் |
| ஷோபியா | – | திருப்பூர் |
| ஜாய்ஸ் | – | திருப்பூர் |
| அகஸ்டின் | – | திருப்பூர் |
| ஜெர்சி | – | திருப்பூர் |

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை செப்டம்பர் மாத இதழில்)**

**I இராஜாக்களின் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் ( 15-20 அதிகாரங்கள்)**

1) அபியாம் எத்தனை வருடங்கள் எருசலேமிலே ராஜ்யபாரம் பண்ணினான்?

2) யார் யாருக்கு இடையே யுத்தம் நடந்து கொண்டிருந்தது?

3) ஆசா என்பவன் யார்?

4) ஏழு நாள் ராஜாவாயிருந்தது யார்? எங்கே ?

5) காகங்கள் மூலம் போஷிக்கப்பட்டது யார்?

6) ஆகாமின் மனைவி யார்?

7) பாகாவின் தீர்க்கதரிசிகள் எத்தனை பேர்?

8) எலியா எங்கே தன்னை ஒளித்துக் கொண்டிருந்தான்?

9) பெனாதாத் யார்?

10) எலியா எங்கே நித்திரை பண்ணினார்?

## ஜூலை மாத வினாக்களுக்கான விடைகள்

1. நானூற்று எண்பது (6:1)
2. அறுபது , இருபது, முப்பது முழ உயரம் (6:2)
3. ஏழு வருஷம் (6:38)
4. பதின்மூன்று வருஷம் (7:1)
5. சீயோன் என்னும் தாவீதின் நரகம் (8:1)
6. நூற்றிருபது தாலந்துபொன் (9:14)
7. சேபாவின் ராஜஸ்திரீ 10:1)
8. ரெகோபெயாம் (12:1)
9. பெத்தேல், தாண் (12:29)
10. அபியா (14:1)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| செல்வம் | - | வெள்ளலூர் |
| ஜமுனா சேகர் | - | திருப்பூர் |
| புளோராசம்மா | - | திருப்பத்தூர் |
| ஜெயராஜ் | - | கோவை |
| செவ்வமணி குணசேகரன் | - | சென்னை |
| அருள்ராஜன் | - | சென்னை |
| தங்கத்தாய் | - | பொங்கலூர் |
| பாக்கியம் சம்பூரணம் | - | ஈரோடு |
| டேவிட் ஜெயச்சந்திரன் | - | மதுரை |
| ஸ்வேதா | - | பவானி |
| ஹேமாவதி | - | பவானி |
| ஈஸ்வரி இம்மானுவேல் | - | பவானி |
| ஹரிஷ் | - | பவானி |
| மாலதி ஜெயசெல்வம் | - | சீர்காழி |
| தரணிக்குமார் | - | திருப்பூர் |
| கங்கா | - | மணலி,சென்னை |
| அகஸ்டி | - | மணலி,சென்னை |
| ரபேக்காள் ஜேசுராஜ் | - | மணப்பாறை |
| ருபவல்யா | - | நாசரேத் |
| மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| இந்திரா ஜெபக்கனி | - | நாசரேத் |
| சாமுவேல் மோகன்தாஸ் | - | சென்னை |
| சாந்தகுமாரி | - | நாதரேத் |
| மீனாட்சி | - | திருப்பூர் |
| செல்சியா பெர்னிஷ் | - | திருப்பூர் |
| மேசியா பிரிசில்லா | - | திருப்பூர் |
| ராஜேந்திரன் | - | சிங்கநல்லூர், கோவை |
| ஜெனிபர் | - | கேத்தி பாலாடா |
| கிளாஸ்டி ரமேஷ் | - | வேலூர் |
| சங்கீதா | - | அவிநாசிபாளையம் |
| ராமசந்திரன் | - | காங்கயம் |
| ஜெனிபர் ரெபேக்கா | - | வேலூர் |
| அனிஷா | - | தரங்கம்பாடி |
| ஷைனி | - | தரங்கம்பாடி |
| இளவரசி | - | காங்கயம் |

# விரிவான வாசல் இடுக்கமான வாசல்

பென்னி மார்டின்

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். வாழ்க்கை என்பது தீர்மானங்களால் நிறைந்திருக்கிறது. ஒவ்வொருவரும் செய்யவும் செய்யாமலிருக்கவும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. வாழ்க்கையில் நாம் எடுக்கும் தீர்மானங்களே வெற்றி அல்லது தோல்வியைத் தீர்மானிக்கின்றன. முன்யோசனையின்றி, முட்டாள்த்தனமாக நாம் எடுக்கும் சில முடிவுகள் முடிவேயில்லாத துயரத்திற்குள் நம்மைத் தள்ளிவிடுகின்றன. எங்கே போகலாம் எங்கே போகக்கூடாது என்றும், யாரிடம் பழகலாம் பழகக்கூடாது என்றும் வாழ்க்கையில் வழக்கமாக சில தீர்மானங்களை எடுக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு வாழ்க்கையில் நாம் தீர்க்கமாக எடுக்க வேண்டிய தீர்மானங்களைக் குறித்து, நாம் மலைத்து நிற்கும் மலைப் பிரசங்கத்தில் விவரமாக விவரித்திருக்கிறார். அதிலும் குறிப்பாக மத்தேயு7:13,14 வசனங்களில் அவர் சொல்லியிருக்கிற காரியங்களை யார்தான் மறுக்கமுடியும், மறக்க முடியும்? **இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்; ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்.** உதாரணமாக, இரு சாலைகள் பிரிகின்ற ஓர் இடத்தில் நீங்கள் நிற்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு சாலை குண்டும் குழியுமாக கரடுமுடாக காட்சி அளிக்கிறது. இன்னொரு சாலை நேராகவும், அழகாகவும் காட்சி அளிக்கிறது. அது பயணிப்பதற்கு பக்குவமாகத் தெரிகிறது. நீங்கள் எந்த பாதையில் பயணம் செய்ய விரும்புவீர்கள்? பலர் இந்த இரண்டாவது வகை சாலையில் பயணிக்கவே விரும்புவார்கள்.

மேற்கண்ட உதாரணத்தை ஆவிக்குரியப் பிரகாரமாக பொருத்திப்பார்போம். நாம் எல்லோருமே ஆவிக்குரிய பயணத்தை மேற்கொண்டுள்ளோம். உலகத்தோடு ஒத்துப்போய்

அவர்கள் செய்கின்ற காரியங்களை நாமும் செய்துவிட்டால் அந்த விசாலமான பாதையில் பயணிப்பது எளிதே. அப்பாதையில் ஒருவர் பயணிக்கும்போது எவ்வித தியாகத்தையும் செய்ய வேண்டியதில்லை. அதே நேரத்தில் இடுக்கமான வாசல் வழியாய் பயணிப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால், அதில் பயணிக்கவோ அதைக் கவனிக்கவோ பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை. மத்தேயு 7:13,14 வசனங்களில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **இரண்டு வகையான வழிகளையும், இரண்டு வகையான மக்களையும், இரண்டு வகையான இடங்களையும்** பற்றி பேசுகிறார். அவைகளை நாம் சற்று விரிவாக இப்போது பார்ப்போம்.

**1. விரிவான வாசல்**

உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இவ்வாசலில் செல்லத்தான் ஆசை. இவ்வாசலில் பயணிக்க எதையும் பணயம் வைக்கத் தேவையில்லை. எந்த வியூகமும் எந்த தியாகமும் தேவையில்லை. அதுமட்டுமல்லாமல் இவ்வாசலில் எவ்விதக் கட்டுப்பாடும் உல்லாசத்திற்கான தட்டுப்பாடும் இல்லாத காரணத்தால் இங்கு தங்கு தடையின்றி மக்கள் வெள்ளம் புரண் டோடும். மனித வரலாற்றின் சுவடுகளைப் புரட்டிப்பார்த்தால் மனித இனத்துக்கு இந்த விரிவான வாசல் மீது ஓர் இனம் புரியாத ஆசை இருந்து வந்திருக்கிறது. நாம் வேதாகமத்தில் பார்க்கும் போது கூட இஸ்ரவேல் ஜனங்களுடைய வாழ்க்கை முறை விரிவான வாசலில் தறிகெட்டுத் திரியும் வாழ்க்கை முறையாகவே இருந்திருக்கிறது. அதன் காரணமாகவே அவர்கள் தேவ கோபாக்கினைக்கு ஆளாகி அழிக்கப்பட்டார்கள். இன்று கூட பலர் கிறிஸ்துவத்தை தழுவாமல் இருப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களுள் ஒன்று, கிறிஸ்துவத்திற்குள் வந்தால் நீங்கள், அதை செய்யக் கூடாது, இதை செய்யக் கூடாது என்று தடை களை விதிக்கிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். அதையும் மீறி நீங்கள் இப்படியே வாழ்ந்தால் பரலோகம் எனும் சொர்க்கத்தை இழந்துவிடுவீர்கள் என்று சொன்னால், சுதந்திரமில்லாமல் சொர்க்கமே கிடைத்தும் என்ன பயன்? என்று நம்மைப் பார்த்து கேட்கிறார்கள்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, கேட்டுக்குப் போகிற வாசல் விரிவாகவும் விஸ்தாரமாகவும்தான் இருக்கும். அது மட்டு மல்லாமல் பலர் உலகத்தின் பெரும்பாலான மக்கள் ஒன்றைத் தெரிந்து கொண்டால், பின்பற்றினால் அது சரியானதாகத்தான் இருக்கும், சிறந்ததாகத்தான் இருக்கும் எனும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாக் காலத்திலேயுமே பின்பற்றுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள், ஜீவனுள்ள

தேவனை உண்மையைப் பின்பற்று கிறவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள் இதன் பொருள் தேவன் சிறந்தவரால்ல என்றாகி விடுமோ? நிச்சயமாக இல்லை.

**II இடுக்கமான வாசல்**

இந்த வாசல் ஜீவனுக்குப் போகிற வழிக்கு ஆரம்ப மாயிருக்கிறது. ஆனால், ஏன் இந்த வாசல் இடுக்கமா யிருக்கிறது? ஏனென்றால், இதில் ஒருவர் பிரவேசிக்க தன்னை வெறுத்தலும், கீழ்படிதலும் அவசியமாயிருக்கிறது (மத்தேயு 16:24). இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் இந்த இடுக்கமான வாசல் வழியாகப் பயணிக்க விரும்புவதில்லை. ஏனென்றால், இதில் பயணிக்க நீதியாக நேர்மையாக வாழ வேண்டியது அவசியமாயிருக்கிறது (அப்போஸ்தலர் 10:35). தொன்று தொட்டு நாம் பார்க்கும்போது மக்கள் அநீதியாகவே வாழ்ந்து பழகியிருக்கிற படியால் இந்த நெருக்கமான பாதையில் பயணிப்பதற்கு அவர்களுக்கு கசக்கிறது. மேலும், அவர்கள் இப்பாதையில் பய ணிப்பவர்களைப் பார்த்து குறுகிய மனப்பான்மை உடையவர்க ளென்றும், ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே முடங்கிக்கிடப் பவர்களென்றும் குறை கூறுகிறார்கள். ஆனால், இந்த இடுக்க மான வாசல் நம்மை நேராகப் பரலோக வாசலுக்கு அழைத்துச் செல்கிறது என்பதை அவர்கள் ஏற்க மறுகிறார்கள். மேலும், மத் தேயு 9:14ல், இயேசு கிறிஸ்து இந்த வழியைக் கண்டுபிடிப்பவர் கள் சிலர் என்று சொல்கிறார். கடந்தகாலச் சம்பவங்களை நாம் வேதாகமத்தின் பக்கங்களில் புரட்டிப்பார்த்தால், நோவாவின் நாட் களில் அந்த ஜலப்பிரளயத்தின் போது நோவா மற்றும் அவருடைய குடும்பத்தார் உட்பட எட்டுபேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள். லட்சகணக்கான மக்கள் நோவாவின் பிரசங்கத்திற்கு செவி மடுக்க மறுத்து மடிந்துபோனார்கள்! வனாந்திர யாத்திரையில் சுமார் ஆறு லட்சம் பேர் பயணம் செய்திருந்தாலும் கூட, வாக்குத்தத்தம் செய் யப்பட்ட கானான் தேசத்தில் யோசுவா, காலேப் ஆகிய இரண்டுபேர் மாத்திமே பிரவேசித்தார்கள். எனவே, காலகாலமாய் நாம் பார்க்கும் போது இந்த இடுக்கமான வாசலைக் கண்டுபிடித்து அதில் பிரவேசிக்கிறவர்கள் ஒரு சிலராக, விரல்விட்டு எண்ணும் எண்ணிக்கையில் தான் இருந்திருக்கிறார்கள்.

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! மேற்சொல்லப்பட்ட காரியங்களை வைத்துப் பார்த்தால் ஆவிக்குரிய பயணத்ல் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப் போம். கேட்டுக்குப் போகிற விரிவான வழியில் பயணிக்கிறோமா? தீமையை அல்லது நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லும் இடுக் கமான வழியில் பயணிக்கிறோமா? வானவராம் இயேசுவை வாழ்

வாதாரமாகக் கொண்டு வாழும் நாம் துன்மார்க்கருடைய ஆலோசனையின் படி நடக்கக்கூடாது என்றும், பாவிகளுடைய வழியில் நிற்கக்கூடாதென்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் [சங்கீதம் 1:1]. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பணம், பதவி, புகழ் போன்றவைகளை நாடி விரிவான விசாலமான வழியில் பயணிக்கிறார்கள். நீதி, நியாயம், நேர்மை போன்றவைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, மனம்போன போக்கில் போய் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால், இந்த உலகமும் உலகத்தில் உள்ளவைகளும் ஒரு நாளில் அழிந்து போகும்.

அழியாத நம் ஆத்துமாவை காத்துக்கொள்ள பிரயாசப்பட வேண்டும். அநித்தியமான பாவ சந்தோஷங்களை நம்மை விட்டு அகற்றி தேவன் நமக்காக வைத்திருக்கிற நித்திய ஜீவனை சுதந்தரிக்க அந்த நெருக்கமான வழியில் பயணிக்க வேண்டும்.

அந்த இடுக்கமான பாதையில் இயேசுவை நோக்கி பயணிக்கும் போது இடையில் தோன்றும் தடைக்கற்களையெல்லாம் வெற்றிப்படிகளாக மாற்ற அவரால் முடியும். நம்மைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவாலே எல்லாவற்றையுஞ் செய்ய நமக்கு பெலனுண்டு [பிலிப்பியர் 4:13]. இவ்வுலக வாழ்க்கையானது கொஞ்ச காலந்தான். இங்கே நாம் அதிக நாட்கள் வாழும்படியாக நம் சரீரம் வடிவமைக்கப்படவில்லை. நாமும் பாடுகள் நிறைந்த இப்பாழாய்ப் போன உலகில் அதிக நாட்கள் வாழ விரும்பவில்லை. நம் ஜீவன் கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறது என்று யாக்கோபு சொல்கிறார். இப்படி நாம் வாழும் இந்த கொஞ்ச நாட்களில் இந்த இடுக்கமான அல்லது நெருக்கமான வழியில் பயணித்து தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்வோம். அதற்கு தேவன் தாமே உதவிசெய்வாராக! ஆமென். ★

### *யோபு புத்தகம் பற்றி வேத அறிஞர்கள்*

- *பழங்காலத்திலும், நவீன யுகத்திலும் ஒப்புமையற்ற ஓர் இலக்கியம்.*
- *மனித மூளையிலிருந்து உருவான உன்னத படைப்பு*
- *நூலில் சொல்லப்பட்டவைகளைத் தாண்டிச் சொல்ல வேண்டுமானால், இதுவரைக்கும் எழுதப்பட்டவைகளில் இதற்கு இணையானது எதுவுமில்லை.*
- *சமுதாய உலகிலும், ஆன்மீக உலகிலும் அண்ணாந்து பார்க்கும் எல்லோரையும் விஞ்சி நிற்கும் ஓர் ஒப்பற்ற மனிதனைப் பற்றிய காவியம்.*

# இயேசு சிலுவையில் வாழ்ந்து காட்டினார்

Bro. K. M. பிலிப் –பவானி

அன்பானவர்களே! யாவருக்கும் உயிர்தெழுந்த நாதர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசு சிலுவையில் வாழ்ந்து காட்டினார் – என்ற செய்தியின் தொடர்ச்சியை இக்கட்டுரையில் தியானிப்போம். எல்லாக் காலத்திற்கும் மாபெரும் அன்பின் வரலாறாக இருப்பது இயேசுவின் சிலுவை வரலாறாகும். தேவன் மனுக்குலத்தின் மீது காட்டிய மாபெரும் அன்பின் வரலாறு அநேக மாற்றங்களை ஏற்படுத்தியது. அது ஆகாயத்தைத் தொட்டது அது அந்தகாரமாயிற்று. சூரியனைத் தொட்டது அது இருளடைந்து. கன்மலைகளைத் தொட்டது; அவைகள் பிளவுபட்டன. தேவலய திரைச் சீலையைத் தொட்டது அது மேலிருந்து கீழாக கிழிக்கப்பட்டது, கல்லறைகளைத் தொட்டது அவைகள் திறக்கப்பட்டு பரிசுத்தவான்கள் உயிரோடெழும்பினர் (மத்.27:50–52). அருகில் இருந்த மனிதர்களைத் தெட்டது கள்ளனின் உள்ளம் உடைக்கப்பட்டு அன்பர் இயேசுவோடு இணைந்தது. நுற்றுக்கதிபதியின் வாய் திறக்கப்பட்டு இவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன் என்று சாட்சி பகிரச் செய்தது. இன்றும் 2000 ஆண்டுகளாக இச்சிலுவையின் வரலாறு அநேகரைத் தொட்டு மனமாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. இவ்வரலாற்றை தொடர்ந்து தியானிப்போம்; பலப்படுவோம்; மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி மனமாற்றங்களை ஏற்படுத்துவோம்.

இயேசு சிலுவையில் 3–ஆம் முறையாக வாய்திறந்து (உலகத்) தாய் மரியாளையும், அன்பான சீஷனையும் கண்டு, **ஸ்திரியே! அதோ உன் மகன்** என்றார். சீஷனைப் பார்த்து **அதோ உன் தாய்** என்றார் (யோவான் :19:26, 27). **மிகத்துன்புறும் ஒருவர் தன்னைப் பற்றி மட்டுமே கவலைப்படுவர்.** ஆனால், இயேசுவின் அன்புள்ளம், தன் பிறப்பால் வேதனைகளையும் நித்தைகளையும், வளர்ப்பில் பாடுகளையும், இறப்பில் சிலுவையின் கொடுமைகளையும் பார்த்து சகித்துக் கொண்டு தன் அருகிலேயே நிற்கும் தாய் மரியாளையும், அழைத்தவுடன் எல்லாவற்றையும் விட்டு வந்து சிலுவை வரை கூடவே பின்பற்றி வந்த சீஷனின் மாறாத அன்பையும், வைராக்கியத்தையும், கனப்படுத்த, ஆறுத படுத்த விரும்பிய இயேசு அவர்களுக்காகப் பேசினார். ஆம், இன்றும் எந்த சூழ்நிலையிலும் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு இயேசுவின் வார்த்தைகளை மட்டும் பின்பற்றுவதில் பக்தி வைராக்கியத்

தோடு வாழும் விசுவாசிகளுக்காக **இயேசு தேவனிடம் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.** (யோவான்:12:1). இம்மையில் ஆறுதலையும், தேறுதலையும் கொடுக்கிறவராகவே இருக்கிறார் என்பதை சிலுவையில் வாழ்ந்து காட்டினார். மேலும், ஒரு கிறிஸ்தவன் தன் கடமைகளையும், பொறுப்புகளையும் எச்சூழ் நிலையிலும் நிறைவேற்றக் கூடியவனாயிருக்க வேண்டும். ஒரு மகனாக தந்தை (தாய்)யாக விசுவாசியாக மனிதனாக குடும்பம், சபை, சமுதாயத்தில் கர்த்தருக்கு முன் ஆற்ற வேண்டிய கடமை களிலிருந்து தவறவே கூடாது (1தீமோ. 5:8) என்பதை வலியுறுத்தவே சிலுவையில் வாழ்ந்து காட்டினார்.

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த நேரத்தில் (பகல் 12-3) (மாற் 15:33-37) திடீரென்று பூமியெங்கும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. உலகத்தின் ஒட்டுமொத்த பாவமும் இயேசுவின் மேல் சுமத்தப்பட்டதால் ( ஏசாயா 53:6) உலகை இருள் கவ்விக்கொண்டது. பாவமில்லாதவர், பரிசுத்தர் இயேசு நமக்காகப் பாவமானார் (II கொரி. 5:21) பாவம் **பிதாவுக்கும், குமாரனுக்கும் உள்ள உறவைப் பிரித்தது. (ஏசாயா59:2) ஆகவே மனுஷ குமார னான இயேசு, தேவனால் கைவிடப்பட்ட அந்த இமைப்பொழுதில் (ஏசாயா54:8).** பிதாவே என்று கூப்பிட மனமற்ற நிலையில் என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று கத றினார். இது பாவத்தின் பயங்கரத்தை, பாதிப்பை வெளிப் படுத்துகிறது. ஆம், **பாவம் உள்ள இருதயத்தை இருள் கவ்விக் கொள்ளும், தேவனால் கைவிடப்படும் நிலையை உரு வாக்கிவிடும்** என்பதை சிலுவையில் வாழ்ந்து காட்டினார். அதே சமயம், தேவனை நோக்கிக் கூப்பிட்டால் ... என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன். ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் (ஏசாயா 54:8) என்ற தேவ வாக்கை நம் வாழ்க்கையில் அனுபவிக்கலாம் என்பதையும் இதன் மூலம் இயேசு வாழ்ந்து காட்டினார்.

இயேசு, தான் தேவனுடைய குமாரனாயிருந்தும், இவ்வுலகில் நமக்காக **மனுஷகுமரன்** ஆனார் என்பதை பலமுறை சொல்லி யிருக்கிறார் ( மத்: 17:22; லூக்கா 9:44, 22:22). இதன் வெளிப்பாடு தான் சிலுவை பாடுகளின் தாக்கத்தால் **தாகமாயிருக்கிறேன்** என்றார். அதே சமயம், அவர் தேவனுடைய மகனாயிருக்கிறபடி யால் அவருடைய தாகம், **ஆத்தும தாகம்** என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே (1தீமோ. 2:6) என்பதில் இயேசுவுக்கு மனுகுலத்தின் **ஆத்தும மீட்பின்** மீது இருந்த தாகம் வெளிப்படுகிறது. இந்த தாகத்தின் தாக்கம் தான் அவரது சிலுவையின் தாகம். இந்தத் தாகம் ஆதி அப்போஸ்தலர்

இருந்தது. ஆதி திருச்சபைகளுக்குள்ளும் இருந்தது. ஆகவே தான், இவர்கள் எல்லோரும் பாடுகள்,எதிர்ப்புகள் மத்தியிலும் எங்கும் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அநேக ஆத்துமாக்களை மீட்டுக்கொண்டனர். இந்த **ஆத்தும தாகம்** நமக்குள் இருந்து, அது செயல்படுமானால் நாமும் அநேக ஆத்துமாக்களை மீட்கமுடியும். அப்பொழுது இயேசு **நான் தாகமாயிருந்தேன்; என் தகத்தை தீர்த்தீர்கள். வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே** (மத். 25:34,35) என்று நம்மை அவரோடு சேர்த்துக் கொள்வார்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கையில், தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்து இரட்சிப்பின் திட்டத்தை தேவ சித்தத்தின்படி பூரணமாய் செய்து முடித்தார் (I பேதுரு1:19). இதன் மனநிறைவாகத்தான் **முடிந்தது** என்று வெற்றி முழுக்கமிட்டு சிலுவையில் வாழ்ந்து காட்டினார். அன்பான தேவ ஜனமே! நாம் வாழும் இந்த வாழ்க்கையில் தேவன் வேதத்தின் மூலம், நாம் செய்யும்படியாய்க் கொடுத்த பொறுப்புக்கள் எல்லாவற்றையும் குறைவின்றி செய்து கொண்டிருக்கிறோமா? நம் தனிப்பட்ட வாழ்க்கை குடும்பம், சபை, சமுதாயம் இவற்றிற்கு ஒரு கிறிஸ்தவனாக ஆற்ற வேண்டிய தேவ பணிகளில் மனநிறைவோடு முடிந்தது என்று சொல்ல முடியுமா? **முடியும்.** ஏனெனில், இயேசு சிலுவையில் வாழ்ந்து காட்டியிருக்கிறார். இந்த இயேசுவின் பெலத்தால் எல்லாவற்றையும் **செய்ய முடியும்.** என்பதே நம் விசுவாசமாயிருக்கட்டும்( பிலி.4:13).

நிறைவாக, **பிதவே! உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன்** என்று சொல்லி ஜீவனைவிட்டார் ( லூக்கா 23:46). குமாரனாகிய இயேசு, பிதா தனக்குக் கொடுத்த ஆவியை குற்றமற்றதாக கறையற்றதும், பிழையற்றதுமாக பரிசுத்தமாய் பிதாவிடம் ஒப்புக்கொடுத்தார். பரிசுத்த பிதாவும் இதை ஏற்றுக் கொண்டார். அன்பானவர்களே பிதா நமக்குக் கொடுத்த ஆவியை நாம் திரும்ப பிதாவிடம் ஒப்படைக்கும்பொழுது, பிதா ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அது குற்றமற்றதாய், கறையற்றதாய், பிழையற்றதுமாயிருக்க இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைகொள்ள வேண்டும் (II பேதுரு 3:4;I தீமோ.6:13). மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாய் இருக்கிறது (நீதி. 20:27). இயேசு சிலுவையில் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை உலகம் உள்ளவரைத் தீபமாய் எரிந்து பிரகாசிப்பதைப் போல நம்முடைய வாழ்க்கையிலும், மனுஷர் நம் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற நம் பிதாவை மகிமைப்படுத்தும்படி, நம் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கு படியாய் வாழ்ந்து காட்டுவோம். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவோம். ஆமென். ★

# கர்த்தரைத் தேடுங்கள்

K. சேகர் -திருப்பூர்

**க**ர்த்தரைத் தேடுங்கள் என்று சொன்னால், அப்படியா என்று ஏளனம் செய்கிறவர்களே, கர்த்தர் யாரென்று ஆணவத்தோடு கேட்கிறவர்களே அவரால் என்ன ஆகும் என்று மேட்டிமையோடு பேசுகிறவர்களே கேளுங்கள்! அவர் வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவன் அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். ஆகவே பூமியெல்லாம் அவருக்குப் பயப்படுவதாக, உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. சங்.33;7-9 ஆம், அவர் நம்மைப் படைத்தவர் என்பதாலும், அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரிக்கிறபடியினாலும் அவர் நம்மை நடத்துகிறபடியாலும், நாம் வாழ்வதற்கு சகல நன்மைகளையும் கொடுக்கிறபடியினாலும் நாம் அவரைத் தேட வேண்டும். இது நம்மேல் விழுந்த கடமை. தேவன் நம்மேல் தம்முடைய நியாயத்தீர்ப்பை நியமித்திருக்கிறபடியால், நாம் செய்கிற எல்லாவற்றையும் நியாயத்தில் கொண்டு வந்து நிறுத்திடுவார். ஆகவே, நாம் கர்த்தரை உண்மையாய்த் தேடுகிறவர்களாக இருக்க வேண்டும். இன்னும் நம் தேவனாகிய கர்த்தரை நாம் எப்படித் தேடுவது. இதோ, தேடுதலைத் தொடர்வோம்...

நம்முடைய முழு இருதயத்தோடும் நாம் அரைத் தேட வேண்டும். சாமுவேல் தீர்க்கதரிசி இஸ்ரவேலருக்குச் சொல்லும் போது, **நீங்கள் முழு இதயத்தோடும் அவருக்குப் பயந்து உண்மையாய் அவரைச் சேவிக்க வேண்டும்** என்றார். எனவே, சேனைகளின் கர்த்தரே நம்முடைய பயமும், அச்சமுமாய் இருக்கிறபடியால், ஜெபத்தோடும், விண்ணப்பத்தோடும் அவரைத் நாம் தேட வேண்டும்.

**நீதியைத் தேடுங்கள்**

நீதி என்பது அநீதிக்கு எதிரான ஓர் ஆயுதம். அநீதி என்பது பாவத்தின் எல்லா நிலைகளிலும் வெளிப்படும். **எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி** என்று வசனம் குறிப்பிடுவதனால் மனிதன் பாவத்தோடு உறவாடுகிறான். நீதிக்கும் அவனுக்கும் சமந்தமில்லாத நிலை ஏற்படுகிறது. ஒருவன் நீதியாக வாழ வேண்டும் என்றால் தேவனையும்..... அவருடைய சத்தியத்தையும் தேட வேண்டும். ஆம், **உம்முடைய நீதி நித்ய நீதி உம்முடைய வேதம் சத்தியம்** என்றும், **உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயம் எல்லாம் நித்தியம்** என்றும் சங்கீதக்காரன் குறிப்பிடுகிறார். அதனால், நீதி என்பது என்ன ? சத்தியம் என்பது என்ன என்பதைப் பற்றி

நாம் தெளிவடைகிறோம் (சங்.119:142,160). மேலும், நமது ஆண்டவராகிய இயேசுவானவர், தம்முடைய வார்த்தை நீதி என்றும், சத்தியம் என்றும் விளம்புகின்றார் (யோவான்.17:7). மனிதர்கள் தேவனுடைய நீதியையும் அவருடைய இராஜ்ஜி யத்தையும் தேடும்போது தான் வாழ்வடைவார்கள் என்று வாக்குறுதியும் அளித்திருக்கிறார் ( மத்.6:33).

**மனத்தாழ்மையைத் தேடுங்கள்**

மனுஷனே நீ உன்னை மண்ணென்று உணராமல் நீ உன்னை மேன்மையாக எண்ணி மகத்துவமுள்ள தேவனுக்கு மேலாக உயர்த்திப் பார்க்கிறாய். தேவன் உன்னை மண்ணென்று நினைத்திருக்க நீ ஒன்றுமில்லாதவனாக இருந்தும் உன்னை ஒரு பெரிய சக்தியாக எண்ணுகிறாய். உன்னைப் படைத்தவருக்கு முன்பாக அடங்கி, கீழ்ப்படிந்து, அவரை கனப்படுத்தி வாழ விருப் பம் இல்லாத நிலையில் அவருடைய ஆசீர்வாதம் உனக்கு இல்லாமல் போகிறது. வாழ்வில் உயர வேண்டும், மேன்மையடைய வேண்டும் என்று நினைக்கும் உனக்கு தாழ்மையில் தான் உயர்வு இருக்கிறது என்பது புரியவில்லையே! ஆம், **கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை. மேலும், தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவர்யம் (கனம்), மகிமை ஜீவன்** (நீதி.22;4). படைத் தவருக்கு முன்பாக நாம் பயந்து வாழ்ந்து அவருடைய பாதம் பணி வது தான் பயபக்திக்குரிய பண்பாகும். அப்படிப்பட்ட தாழ்வில் தான் நம் வாழ்வின் உயர்வு இருக்கிறது. மனத்தாழ்மை என்பது விலையுயர்ந்த அணிகலன். அதை அணிந்து கொள்ளும் போது, சகலமும் நம்மில் அலங்காரமாயிருக்கிறது.

ஆம், ஞானஸ்நானத்தின் போது நாம் நம்மைத் தாழ்த்து கிறோம். அதாவது, தேவனுடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படிகி றோம். நாம் ஜெபிக்கும் போது மனத்தாழ்மையை வெளிப்படுத்துகி றோம். இதினிமித்தம் நாம் அவருடைய உதவியை நாடுகிறோம். மேலும், தேவனுக்கு காணிக்கை கொடுக்கும்போது மனத் தாழ்மையை வெளிப்படுத்துகிறோம். எப்படியென்றால், நம் முடைய நன்றியை நாம் தேவனுக்கு முன்பாக வெளிப்படுத்துகி றோம். பிரியமானவர்களே! தேவனிடத்தில் நாம் உதவியைத் தேடும் போது மட்டுமல்ல, நன்மைகளை எதிர்பார்க்கும் போது மட்டும் அல்ல, அவருக்கென்று காணிக்கைக் கொடுக்கும் போ தும் நம்முடைய பயபக்தியையும், பணிவையும், மனத்தாழ்மையை யும் வெளிப்படுத்த வேண்டும். **தேவனாலேயன்றி ஒரு மேன்மை யும் இல்லை, அவருக்கு முந்திக் கொடுத்தவனும் ஒருவனும் இல்லை.** (1நாளா.29:12-14;யோபு:41:11). ஆகையால் அன்பான வர்களே! இந்த நல்ல குணநலன்களை நான் தேடிக் கண்டடை வோம். தேவனுடைய நிறைவான ஆசீர்வாதங்களை பெறுவோம். ஆமென்! ★

# மாயமான தாழ்மை

Bro K. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதல் உண்டவதாக. பொதுவாக கிறிஸ்து தாழ்மையை வலியுறுத்துகிற வேளையில், இங்கு கொலோ 2:19–23 பகுதியில் மாயமான தாழ்மை என்பது தேவனை ஆராதிக்கிற விஷயத்தில் யூதர்கள் பழைய ஏற்பாட்டு முறைமையின்படி ஆராதிப்பது கிறிஸ்துவின் மரணத்திற்கு பின்பு மாற்றப்பட்டது. எப்படியெனில் பழைய ஏற்பாட்டு முறைமைகள் வருங்காரியங்களுக்கு நிழலாகவும் அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது என்றும் குறிப்பிடுகிறார் (கொலே.2:17). அதில் முக்கியமான ஒன்று அவர்கள் வருஷந்தோறும் அநுசரித்த பஸ்கா பண்டிகை நிறுத்தப்பட்டு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு உருவான கிறிஸ்துவின் சபையாகிய தேவ ஜனங்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் கைக்கொள்கிற அப்பம் பிட்குதல். ஏனென்றால், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டார் (1 கொரி. 5:7). ஆனால், சில ஆதி சபையார் பழைய ஏற்பாட்டு முறைமைகளை அநுசரிக்க முற்பட்டதால் அது மாயமான தாழ்மை என்று புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது.

ஆண்டவர் இயேசுவின் காலத்திலேயே இப்படிப்பட்ட முறைமைகள் நியாயப் பிரமாணத்தின்படி சரியாகச் செய்யவில்லை. எனவே, ஆண்டவர் அவர்களை மாயக்காரரே என்று அழைத்து எச்சரித்தார். அவை ஓய்வு நாள், விருத்த சேதனம், தசமபாகம், உபவாசம் போன்ற காரியங்களாகும். உதாரணத்திற்கு, ஓய்வுநாளில் சூம்பின கையுடைய மனுஷனை சுகப்படுத்தும் சந்தர்பத்தில் ஓய்வுநாளில் நன்மை செய்வதோ அல்லது தீமை செய்வதோ எது சரி என ஆண்டவர் சுற்றியிருந்த ஜனங்களைக் கேட்டபோது இருதயக்கடினத்தால் அவர்கள் பதிலளிக்கவில்லை. ஆனால், அவனை சுகப்படுத்திய பின், உங்களில் ஒருவனுடைய ஆடு ஓய்வுநாளில் குழியில் விழுந்தால் துக்கி விடானோ? என்று அவர்கள் மதியீனத்தைக் கடிந்து கொண்டார். அதே வண்ணமாய் 18 வருடம் கூனியாயிருந்த ஒரு ஸ்திரீயை இயேசுவானவர் சுகப்படுத்தியபோது ஓய்வுநாளில் உங்கள் எருது அல்லது கழுதையை அவிழ்த்து நீங்கள் தண்ணீர் காட்டுவதில்லையா? என்று ஆண்டவர் அவர்களைப் பார்த்துக் கேட்டபோது தாங்கள் கோபித்துக் கொண்டதற்காக ஜனங்கள் வெட்கப்பட்டார்கள் (லூக்கா 13:14).

நியாயப் பிரமாணத்தின்படி நடப்பதாகக் காட்டிக் கொண்ட பரிசேயர் மற்றவர்களை அற்பமாக நினைத்தார்கள். அந்தப் பழக்கமே ஆரியர்கள் முலமாக நம் நாட்டில் தீண்டாமையைக் கொண்டு வந்தது. இரண்டு பேர் ஜெபம் பண்ணும் உதாரணத்தில், பரிசேயன்

நான் வாரத்துக்கு இரண்டு தரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தி யத்திலெல்லாம் தசமபாகம் தருகிறேன் எனப் பெருமைப்பட்டுக் கொண்டான்.

ஆனால், பாவியாகிய என் மேல் கிருபையாய் இரும் என்று தன்னைத் தாழ்த்திய ஆயக்காரனே தேவனுடைய பார்வையில் நீதிமானக்கப்பட்டான். 38 வருடமாக வியாதியாயிருந்த ஒருவனுக்கு உதவ முடியாத அந்த யூதர்கள் அவன் ஓய்வுநாளில் சுகமாக்கப்பட்டதற்காக இயேசுவைக் கொலைசெய்ய வகை தேடினது மாயமான தாழ்மையல்லாமல் வெறென்னவாக இருக்க முடியும்?

அப்படியே உபவாசமும் இருந்தது. பகைக்கிறவர்களிடம் சண்டைப்போட்டு வீழ்த்த உபவாசமிருந்தனர் ஏசாயா 58:4,5. ஆனால், தேவன் உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு ஆகாரம் கொடு என்றார். வெறும் சரீர ஒடுக்கம் தேவ பக்தி அல்ல. ஏழைகளுக்கு உதவி செய்வதும், இரக்கம் காட்டுவதுமே உண்மையான உபவாசம் என்றார். ஏசாயா 58:6,7 இன்றைய நாளிலும் அமாவாசை ஜெபம் என்றும், லெந்து நாட்கள் போன்ற மனுஷ கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிற மனுஷரைப் பார்க்கிறோம். குழந்தை ஞானஸ்நானம், பூசைகள் போன்றவை கிறிஸ்தவத்தில் சடங்குகளாக அநுசரிக்கப்படுகிறது. இவைகளெல்லாம் மாயமான தாழ்மையாக இருக்கின்றன. வெந்தயம், சீரகம் போன்ற சிறு விஷயத்தில் தசமபாகம் கொடுத்து நீதி, இரக்கம், விசுவாசம் போன்ற அவசியமானவைகளை விட்டுவிட்டதை ஆண்டவர் கடிந்துக் கொண்டார் (மத். 23:23) மனுஷர் காண தர்மம் செய்வதும், பிறர் காண ஜெபம் பண்ணுவதும் மாயமான காரியம் என்று உணராமல் இருந்த ஜனங்களை, **மாயக்காரரே! பூமியின் தோற்றத்தையும், வானத்தின் தோற்றதையும் நிதானக்கிற நீங்கள் இதை நிதானியாமல் இருக்கிறதென்ன** என்று உணர்த்தினார்.

பலி, காணிக்கைகளை செலுத்துவதில் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த ஜனங்களிடம், பலியைப் பார்க்கிலும் தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுத்துக் கீழ்ப்படிவதே முக்கியம் என்றார். அது மாத்திரமல்ல நொறுங்குண்ட இருதயமே பலியை விடமுக்கியம் என்றார் சங். 51:16,17. பெற்றோரை மதிக்காமல் கொர்பான் என்ற காணிக்கை கொடுப்பது மாயமான தாழ்மை என எச்சரித்தார் (மாற்கு 7:11கு திருமணம் செய்யாமலிருப்பது பக்தி என்பதை பிசாசுகளின் உதேசம் என அப். உபதேசம் கண்டிக்கிறது 1தீமோ. 4:2,3. ஆகவே, கன்னியாஸ்திரீகள் என்பது தேவனுடைய ஆலோசனை அல்ல அது மாயமான தாழ்மையே. லூக்கா 6:38-ல் கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக்கு கொடுக்கப்படும் என்பது காணிக்கை பற்றியல்ல. மற்றவர்களை குற்றவாளியாகத் தீர்க்கிற நம் குணாதிசயத்தை மாற்றி அன்பையும், இரக்கத்தையும், மன்னிப்பையும் நாம் கொடுக்கும்போது, அது திரும்ப அதிகமாக நமக்குக் கிடைக்கும் என்பதையே ஆண்டவர்

உரைத்தார். அப்படியில்லாத பட்சத்தில் நம் ஆராதனை மாயமான தாழ்மையாகிவிடும். கிறிஸ்துவின் காலத்தில் பரிசேயர், சதுசேயர் என்பவரது புளித்த மாவு (உபதேசம்) போன்று இன்றைய நாளிலும் தேவனை அசட்டை பண்ணுகிற காரியங்கள் உண்டு. உதாரணமாக, படிப்பிற்காக சபைக் கூடுதலை விடுதல், வேலைக்காக சபை இல்லாத இடங்களுக்கு செல்ல ஆயத்தமா யிருப்பது, திருமணம் மற்றும் குடும்ப சுபகாரியங்களுக்காக சபைக் கூடுதலை விட்டுவிடுதல் போன்றவைகளில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உபதேசப்படி நாம் நடவாத போது வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்று திட்டு வாங்கிய வேதபாரகர், பரிசேயரைப் போல ஆகிவிடுவோம். அவர்கள் மனுஷர் முன்பாக தங்களை நீதி மான்களாகக் காண்பித்து உள்ளத்திலோ மாய்மாலம், அக்கிரமத் தால் நிறைந்து காணப்பட்டார்கள் (மத். 23, 27,28) ஐசுரியவான் களாக விரும்புகிறவர்கள் பலவித இச்சைகளில் விழும் ஆபத்தை நாம் உணர்ந்து, தேவபக்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, நம் சகோதர சிநேகத்தில் மாயமற்றவர்களாக இருக்க வேண்டும் (1 பேது 1:22) சகோதர சிகேத்தில் நிலைத்திருக்க அப். உபதேசம் வலியுறுத்து கிறபடி (எபி. 13:1) நம் விசுவாசம் மாயமற்றதாகக் இருக்க வேண்டும் (1தீமோ. 1:5). மற்றுமாக நம் அன்பு மாய மற்றதாக காணப்பட வேண்டும் (2கொரி.6 ) இவைகளையே கிறிஸ்து நமக்கு போதித்து மாதிரியைப் பின் வைத்துப் போனார். நாம் தேவனை சேவிக்க மனத்தாழ்மை அவசியம் தேவைப் படுகிறது. இதையே பவுல் அப். 20:19 ல் வெளிப்படுத்தியுள்ளார். இந்த மனத்தாழ்மை உள்ளவர்களே சபைகூடுதலில் இடைவிடாமல் பங்கேற்க முடியும்.ஆகவே, 2 பேதுரு 1:7 ன் படி **தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத் தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.** சமாதானத்திற்குக் காரணராகிய தேவன் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பாராக. ஆமென்! ★

## நாளும் நடப்பும்

- முப்படைகளுக்கும் ஒரே தளபதி – மத்திய அரசு
- ஆர்.ஐ. சாட் –3 செயற்கைக்கோளை விரைவில் விண்ணுக்கு அனுப்புகிறது இஸ்ரோ
- 45 அரசு கலை – அறிவியல் கல்லூரிகளில் 81 புதிய பாடப் பிரிவுகள் – தமிழக அரசு
- பாக்டீரியா பரவுதலைக் கண்டறியும் கையடக்கக் கருவியை இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு – ஐஐடி
- வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி, ஆகஸ்டு 16 –ம் தேதி முதல் செப்டம்பர் 30–ம் தேதி வரை நடைபெறும் – தலைமைத் தேர்தல் அதிகாரி
- மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்தியா கைப் பற்றியது.